**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.175/2024**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தனலெட்சுமி | தொழில் | : House Wife |
| தகப்பனார் பெயர் | : கதிர்வேல் | கணவர் பெயர் | : கடற்கரை |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் டவுன் | வயது | : சுமார் 43 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 11.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் ? சரியல்ல. நான் படித்து பார்த்துவிட்டு தான் கையொப்பம் செய்துள்ளேன். வாதியிடம் கடன் வாங்கவில்லை என்று நான் சொல்லியுள்ள நிலையில் வாதி மீது காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுக்கவில்லை என்றால் ? புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. நான் தாவா கடனுறுதிசீட்டினை சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொடுத்து தாவா பிரமாமிசரி நோட்டை பெற்றுக் கொண்ட காரணத்தினால் தான் காவல் நிலையத்தில் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் ? சரியல்ல. வாதிக்கு கொடுக்க வேண்டிய கடனை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் பொய்யான முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சயிம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டில் நான் எந்த இடத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்று நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? ஆமாம், குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் தாவா கடனுறுதிசீட்டில்

கையெழுத்து செய்து கொடுத்த காரணத்தினால் தான் எந்த இடத்திலும், நான் கையெழுத்து செய்யவில்லை என்று சொல்லாமல் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால்? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டு தகுந்த மறுபயனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றாலும், தாவா கடனுறுதிசீட்டில் கண்டுள்ள அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் ? சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்தபோது எனது பெயரில் உள்ள சொத்துக்களை நான் விற்பனை செய்யாமல் வைத்திருந்தேன் என்றால் ? சரியல்ல, வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே விற்பனை செய்துவிட்டேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு சொத்தினை நான் விற்பனை செய்திருக்கும்பட்சத்தில் வழக்கிற்காக வேண்டி சொத்தினை விற்பனை செய்ததாக தான் அர்த்தம் என்றால் ? இல்லை. தாவா தாக்கல் செய்த பிறகு வாதியின் கடனை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் வேறு நபருக்கு சொத்தினை விற்பனை செய்துவிட்டேன் என்றால் ? சரியல்ல.

(ஒ/ம்.திரு.சி.ஜெயப்பிரகாஷ்)
சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்